ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் இதழியல் துறை மாணவியருக்கான உலக புகைப்பட தின பயிற்சிப் பட்டறை

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியல் துறை இளங்கலை மாணவியருக்கான உலக புகைப்பட தின பயிற்சிப் பட்டறை (19.08.2025) நடைபெற்றது. நிக்கான் காமிரா கம்பெனியின் தமிழ்நாடு தலைமை பயிற்றுனர் பிரபு மோகன் மற்றும் அதே நிறுனவனத்தைச் சார்ந்த மற்றொரு பயிற்றுனர் சன்னி மற்றும் மாருதி போட்டோ ஸ்டோர் சரவணன் ஆகியோர் புகைப்படக் கலையின் நுணுக்கங்களைக் கற்றுக்கொடுத்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியல் துறை தலைவர் மோனிக்கா மற்றும் ஆசிரியர்கள் மாரியம்மாள்.இ அக்சயா ஏற்பாடு செய்திருந்தனர். கல்லூரியின் மூத்த பேராசிரியர் மற்றும் பொருளியல் துறை தலைவர் மஹாலட்சுமி தலைமையுரை ஆற்றினார். மாணவியர் ஆர்வமுடன் புகைப்படக்கலையின் நுணுக்கங்களைக் கேட்டு தங்கள் திறமைகளை மெருகேற்றிக் கொண்டனர்.










DEPARTMENT
OF
JOURNALISM
AND
MASS

